## மண், நீரில் கலந்துள்ள உலோகங்களை கண்டறியும் கருவி: ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் உருவாக்க திட்டம்




**சென்னை:** சென்னை ஐஐடி சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு: இந்தியாவில் உள்ள கிராமப்புற குடியிருப்புகளில் உள்ள குடிநீர்ஆதாரங்கள் புளோரைடு, ஆர்சனிக், கன உலோகங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்படுவதாக மத்திய அரசின் ஜல்சக்தி அமைச்சகம் நடத்திய ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. மண்ணில் கன உலோகங்கள் சேர்ந்துள்ளதால் உப்புத்தன்மை கலந்து மண்ணின் தரம் பாதிக்கப்படுகிறது. மேலும்,வேளாண் நிலங்களில் விளைச்சல்குறைவதுடன், மனித உடல்நலத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இதை தவிர்க்கும் விதமாகமண் மற்றும் நீரில் கலந்துள்ள உலோகங்களை கண்டறிவதற்கு ஏதுவாக சிறிய அளவிலான கையடக்க கருவியை உருவாக்குவதற்கான வடிவமைப்பு திட்டத்தைசென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் முன்னெடுத்துள்ளனர். இதற்கான குழுவில் சென்னை ஐஐடி

உலோகவியல் மற்றும் பொருட்கள் துறை இணை பேராசிரியர்கள் ராம் கல்பாத்தி, டிஜூ தாமஸ், கே.வி.வித்யா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த கருவியைக் கொண்டு எந்த முன்பயிற்சியும் இல்லாமல் மண், நீர் ஆகியவற்றின் தரத்தைவிரைவாக கண்டறிய முடியும்.மண் மற்றும் நீரில் கலந்துள்ள உலோகங்களை அறிந்து கொள்ளவும் இந்த கருவி உதவும். இதன்மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதை செல்போன் செயலியில் தரவுகளை வழங்குவதுதான் இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும். இந்த கருவிக்கு தற்காலிககாப்புரிமையை பெறுவதற்கானபணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் கவிஞர் தமிழ்ஒளிக்கு சிலை அமைக்கப்படும்: பிறந்தநாள் நூற்றாண்டையொட்டி முதல்வர் அறிவிப்பு



**சென்னை:** கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டை முன்னிட்டு, தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் சிலை அமைக்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி அடுத்த ஆடூரில் கடந்த 1924 செப்.29-ம் தேதி பிறந்தவர் கவிஞர் தமிழ்ஒளி. பாரதியாரின் வழித்தோன்றலாகவும்,

பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கி கவிதைகளை படைத்தவர். கதை, கட்டுரை, இலக்கிய திறனாய்வு, மேடை நாடகம், குழந்தை பாடல்களையும் எழுதியுள்ளார். அவரது பிறந்தநாள் நூற்றாண்டை முன்னிட்டு, நூற்றாண்டு விழா குழுவினர் முதல்வர் ஸ்டாலினிடம் பல்வேறு கோரிக்கைகளை விடுத்தனர்.


இதையடுத்து, முதல்வர் வெளியிட்ட அறிவிப்பில், கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டை முன்னிட்டு, தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சிதுறை சார்பில் அவரது மார்பளவு சிலை அமைக்கப்படும்.

பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், வங்கியில் ரூ.50 லட்சம் வைப்புத் தொகையாக செலுத்தி, அதில் இருந்து கிடைக்கும் வட்டித் தொகையில் இருந்து ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சி துறை மூலம் தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்தி கவிஞர் தமிழ்ஒளி பெயரில் பரிசுகள் வழங்கப்படும்' என தெரிவித்துள்ளார்.

முதல்வரின் அறிவிப்பை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் மாநிலசெயலாளர் முத்தரசன் ஆகியோர் பாராட்டி வரவேற்றுள்ளனர்.

கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக்குழு சார்பில், அதன் தலைவர் சிகரம் ச.செந்தில்நாதன், செயலாளர் இரா. தெ,முத்து, பொருளாளர் வே.மணி ஆகியோரும் முதல்வரின் அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துள்ளனர்

## புவி சுற்றுப்பாதை பயணம் நிறைவு | சூரியனை நோக்கி செல்லும் ஆதித்யா: இஸ்ரோ தகவல்




**சென்னை**: சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்காக ஆதித்யா எல்-1 எனும் நவீன விண்கலத்தை இஸ்ரோ கடந்த செப்.2-ம் விண்ணில் செலுத்தியது. பின்னர், பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு ஆய்வு மையத்தில் இருந்து, விண்கலத்தில் உள்ள உந்துவிசை இயந்திரங்கள் இயக்கப்பட்டு, அதன் புவி நீள்வட்ட சுற்றுப்பாதை தூரம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டது.

இதையடுத்து விண்கலத்தை புவியின் ஈர்ப்பு விசைப்பகுதியில் இருந்து விடுவித்து, சூரியனை நோக்கி பயணிக்க வைக்கும் முயற்சி நேற்று (செப்.19) அதிகாலை 2 மணியளவில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. ஆதித்யா விண்கலம் தற்போது திட்டத்தின் இலக்கான சூரியனின் எல்-1 பகுதியை நோக்கி தனது பயணத்தை தொடங்கியுள்ளதாக இஸ்ரோ தனது ட்விட்டர் தளத்தில் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறும்போது, “ஆதித்யா விண்கலம் புவியின் நீள்வட்டப் பாதையில் தனது பயணத்தை நிறைவு செய்தது. தொடர்ந்து புவியில்

இருந்து 15 லட்சம் கி.மீ தொலைவில் உள்ள சூரியனின் எல்-1 பகுதியை நோக்கி விண்கலம் சீரான வேகத்தில் பயணித்து வருகிறது. 110 நாட்களுக்கு பிறகு எல்-1 பகுதிஅருகே சென்றதும் விண்கலம் அதை மையமாக கொண்ட சூரியஒளிவட்டப் பாதையில் நிலைநிறுத் தப்பட உள்ளது.

அங்கிருந்தபடியே எல்-1 பகுதியை மையமாகக் கொண்ட சுற்றுப்பாதையில் வலம் வந்தவாறு சூரியனின் கரோனா மற்றும் போட்டோஸ்பியர், குரோமோஸ்பியர் பகுதிகளை ஆதித்யா ஆய்வு செய்யும்” என்று தெரிவித்தனர்.

இதற்கிடையே ஆதித்யா விண்கலம் புவி சுற்றுப்பாதையில் வலம்வந்தபோது மேற்கொண்ட அறிவியல் ஆராய்ச்சி தகவல்களையும் இஸ்ரோ வெளியிட்டுள்ளது. அதன்படி விண்கலத்தில் இருந்த ஸ்டெப்ஸ் கருவியின் 6 சென்சார்கள் மூலம் செப்.10-ம் தேதி புவியில் இருந்து 50 ஆயிரம் கி.மீ தூரத்தில் உள்ள அதிவெப்பச் சூழல்,அயனிகள் மற்றும் எலக்ட்ரான்களை ஆய்வு செய்து தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

புவியைச் சுற்றியுள்ள கனிமங்கள் மற்றும் அவற்றின் பண்புகளை விஞ்ஞானிகள் அறிந்து கொள்ள இந்த தரவுகள் உதவியாக இருக்கும் என்று இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகளிர் இடஒதுக்கீடு மசோதா 2029-ல் அமலாகும்



**புதுடெல்லி**: மகளிர் இடஒதுக்கீடு மசோதா வரும் 2029-ம் ஆண்டில்தான் அமல் செய்யப்படும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

மக்களவை, மாநில சட்டப் பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் நாரி சக்தி வந்தன் மசோதா மக்களவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதா தொடர்பாக சட்ட நிபுணர்கள் கூறியதாவது: நாரி சக்தி வந்தன் மசோதா என்பது 128-வது அரசியலமைப்பு திருத்த மசோதா ஆகும். இந்த மசோதா மக்களவை, மாநிலங்களவையில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நிறைவேற்றப்பட வேண்டும். இதன்பிறகு நாட்டில் உள்ள மொத்த மாநிலங்களில் சுமார் 50 சதவீத மாநிலங்களின் சட்டப்பேரவைகளில் நாரி சக்தி வந்தன் மசோதாவை நிறைவேற்ற வேண்டும்.

கடந்த 2021-ம் ஆண்டிலேயே மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த கணக்கெடுப்பு காலதாமதமாகி வருகிறது. வரும் 2027-ம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படலாம் என்று

எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பிறகு மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட உள்ளன.

புதிய தொகுதிகளின் அடிப்படையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா அமல் செய்யப்படும். இதன்படி வரும் 2029-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போதுதான் மசோதா அமலுக்கு வரும். சட்ட மசோதா அமலுக்கு வந்த பிறகு 15 ஆண்டுகள் செல்லுபடியாகும். அதன்பிறகு காலத்தை நீட்டித்துக் கொள்ளலாம். இவ்வாறு சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

**மசோதா கடந்து வந்த பாதை:** கடந்த 1996-ம் ஆண்டு அப்போதைய பிரதமர் தேவகவுடா தலைமையிலான ஆட்சியின்போது முதல்முறையாக மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் மசோதா தோல்வி அடைந்ததால் நாடாளுமன்ற கூட்டுக் குழு பரிந்துரைக்கு அனுப்பப்பட்டது. அதே ஆண்டு மக்களவை கலைக்கப்பட்டதால் மசோதா காலாவதியானது.

1998-ல் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது. அப்போதும் போதிய ஆதரவு இல்லாததால் மசோதா காலாவதியானது. கடந்த 1999, 2002, 2003-ம் ஆண்டுகளில் மசோதா தாக்கல் செய்யப்பட்டு நிறைவேறாமல் போனது. கடந்த 2010-ல் மகளிர் இடஒதுக்கீடு மசோதா மாநிலங்கள வையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் மக்களவையில் நிறைவேற்ற முடியவில்லை.

சுமார் 27 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற தீவிரம் காட்டப்படுகிறது.

## ‘டீன் ஏஜ்’ தற்கொலைகளை தடுக்க மனநல கல்வி திட்டம் அமல்படுத்தப்படுமா?



மனநல ஆலோசகர் ப.ராஜசவுந்தரபாண்டியன்

**மதுரை**: சமீபகாலமாக டீன் ஏஜ் வயதில் மாணவ, மாணவியர் தற்கொலை செய்து கொள்வது கவலையை ஏற்படுத்தி உள்ளது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் 2021 அறிக்கையின்படி, பெரும்பாலான தற்கொலைகள் மகாராஷ்ட்ராவில் பதிவாகி உள்ளன. அங்கு 22,207 (13.5%) தற்கொலைகள், தமிழகத்தில் 18,925 (11.5%), மத்தியப் பிரதேசத்தில் 14,965 (9.1%), மேற்கு வங்கத்தில் 13,500 (8.2%) மற்றும் கர்நாடகாவில் 13,056 (8.0%) தற்கொலைகள் நடந்துள்ளன.

நாட்டில் 2021-ல் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒவ்வொரு நாளும் 35-க்கும் அதிகமானோர் என்ற விகிதத்தில் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். இது 2020-ல் இருந்து 4.5 சதவீதம் அதிகரித்துள்ளது. இதில், 18 வயதுக்கு உட்பட்ட 10,732 பேர் தற்கொலை செய்ததில், 864 பேர் ‘தேர்வில் தோல்வி’ காரணமாக இறந்துள்ளனர். இதுகுறித்து மதுரை கே.கே.நகரைச் சேர்ந்த மனநல ஆலோசகர் ப.ராஜ சவுந்தரபாண்டியன் கூறியதாவது:

சமுதாயத்தில் இருந்துதனிமையாக இருத்தல், தற்கொலை பற்றி அதிகமாக பேச்சு,மரணம் பற்றி பேசுதல், தேவையில்லாமல் மாத்திரை, கத்தி

போன்றவற்றை வாங்குதல், தூக்கத்தில் பிரச்சினை, சரியாக சாப்பிடாமல் இருப்பது, போதைப் பொருட்களுக்கு அடிமையாவது, செய்யும் வேலை அல்லது படிப்பில் பிரச்சினை, எப்போதும் ஒருவித பதற்றத்துடன் காணப்படுதல், எளிதில் எரிச்சலடைதல், மவுனமாக இருத்தல், குற்ற உணர்ச்சி, மனநல பாதிப்பு, நம்பிக்கை இல்லாமல் பேசுவது, தற்கொலை முயற்சியில் ஏற்கெனவே ஈடுபட்டவர்கள் போன்றவை,தற்கொலை செய்து கொள்வதற்கான முக்கிய காரணிகள் ஆகும்.

டீன் ஏஜ் தற்கொலையைத் தடுப்பதில் பெரிய தடையாக இருப்பது மனநல பிரச்சினைகளை பற்றிய தவறான எண்ணம். பெற்றோர், கல்வியாளர்கள் மற்றும் சமூகம்ஆகியோர் மனநலம் பற்றிய வெளிப்படையான உரையாடல்களை ஊக்குவிக்கும் சூழலை வளர்க்க வேண்டும். உதவியை நாடுவது மன வலிமையின் அடையாளம், பலவீனம் அல்ல என்பதை மாணவர்களிடம் வலியுறுத்த வேண்டும்.

டீன் ஏஜ் பருவத்தினர் கல்விசார்ந்த மன அழுத்தம் மட்டுமில்லாது சமூக அழுத்தம் மற்றும் மனநலப் பிரச்சினை வரை அதிக சவால்களை எதிர்கொள்கின்றனர். குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் செயல்பாடுகளில் இருந்து விலகுதல், நடத்தையில் திடீர் மாற்றம் மற்றும்நம்பிக்கையின்மையின் வெளிப்பாடு ஆகிய அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக அதற்கான தீர்வை கண்டறிந்து உதவ வேண்டும். ஒரு வலுவான ஆதரவு தளத்தைஉருவாக்குவது டீன் ஏஜ் வயதினருக்கு முக்கியம்.

பெற்றோர் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையில் தீவிர கவனம்செலுத்த வேண்டும். அவர்கள் பிரச்சினைகளை காது கொடுத்து கேட்க வேண்டும். மேலும் அவர்களின் கவலைகளை பகிர்ந்துகொள்ள பாதுகாப்பான இடத்தை வழங்க வேண்டும். பள்ளிகள் மற்றும் சமூகங்கள் ஆலோசனை சேவை மற்றும் மனநல கல்வித் திட்டங்களை வழங்க வேண்டும். டீன் ஏஜ் பருவத்தினர் நெருக்கடியில்

இருக்கும்போது யாரை தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

அது ஒரு அமைப்பாகவோ, மனநலத் துறை சார்ந்தவராகவோ அல்லது நம்பிக்கை உள்ள ஒரு பெரிய மனிதராகவோ இருக்கலாம். பதின்ம வயதினருக்கு சமாளிக்கும் திறன் மற்றும் மீள் தன்மையை கற்பிப்பது தற்கொலை தடுப்புக்கான மற்றொரு முக்கிய அம்சமாகும். எந்த பதின்ம வயதினரும் தனியாகவோ அல்லது உதவியின்றியோ இருப்பதை உணராமல் பார்த்து கொள்வது சமூகத்தில் ஒவ்வொருவரின் கடமை. இவ்வாறு அவர் கூறினார்.

## 96 ஆண்டுகள் பழமையான நாடாளுமன்றம் 'அரசியல்சாசன அவை' என அழைக்கப்படும்: பிரதமர் மோடி அறிவிப்பு


பிரதமர் மோடி, காங்கிரஸ் கட்சியின் சோனியா காந்தி மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன காரக்கே

**புதுடெல்லி:** பழைய நாடாளுமன்ற கட்டிடம் அரசியல்சாசன அவை என்று அழைக்கப்படும் என பிரதமர் மோடி நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தின் பழைய கட்டிடம் பற்றி நேற்று முன்தினம் புகழ்ந்து பேசிய பிரதமர் மோடி, எம்.பி.க்கள், புதிய நம்பிக்கையுடன் புதிய

நாடாளுமன்றத்துக்குள் நுழைவர் என குறிப்பிட்டார். இந்நிலையில், நாடாளுமன்ற பழைய கட்டிடத்துக்கு பிரியா விடையளிக்கும் வகையில் மைய மண்டபத்தில் நேற்று கடைசியாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:

விநாயகர் சதுர்த்தி புனித நாளில் நாம் இங்கிருந்து விடைபெற்று புதிய நாடாளுமன்ற கட்டிடத்துக்கு செல்கிறோம். இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கான உறுதியுடனும் தீர்மானத்துடனும் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை நோக்கி நாம் செல்கிறோம். இந்த அவையில்தான் அரசியல் சாசனம் உருவானது. இந்த மைய மண்டபத்தில் நாட்டின் தேசியக் கொடியும், தேசிய கீதமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1952-க்குப் பிறகு உலகம் முழுவதிலுமிருந்து சுமார் 41 நாடுகளின் தலைவர்கள் இந்த மண்டபத்தில் உரையாற்றியுள்ளனர். இந்தியாவின் பல குடியரசுத் தலைவர்கள், 86 முறை இங்கு உரையாற்றி உள்ளனர்.

கடந்த 70 ஆண்டுகளில் மக்களவையும் மாநிலங்களவையும் சுமார் 4 ஆயிரம் சட்டங்களை நிறைவேற்றியுள்ளன. இந்த அவையில் இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டமும், நடந்த ஒவ்வொரு விவாதமும், இங்கு எடுக்கப்பட்ட ஒவ்வொரு முடிவுகளும் இந்தியாவின் உயர்ந்த லட்சியங்களை ஊக்குவிக்க வேண்டும்.

இந்த அவையின் பெருமை ஒருபோதும் குறையக் கூடாது. என்னிடம் ஒரு ஆலோசனை உள்ளது. இதை பழைய நாடாளுமன்றம் என நாம் அழைக்கக் கூடாது. இதை ‘சம்விதான் சதன்’ (அரசியல்சாசன அவை) என அழைக்க அனுமதிக்கும்படி மக்களவை சபாநாயகர் மற்றும் மாநிலங்களவை தலைவரிடம் வேண்டுகோள் விடுக்கிறேன்.

அப்போதுதான் இது நமக்கு எப்போது உற்சாகம் அளிக்கும். சம்விதான் சதன் என நாம் அழைக்கும்போது, இந்த அரசியல் சாசன அவையில் அமர்ந்த சிறந்த தலைவர்களை நாம் நினைவு கூற முடியும். வரும் தலைமுறையினருக்கு இந்தப்

பரிசை வழங்கும் வாய்ப்பை நாம் நழுவவிட கூடாது. ஆலோசனைக்குப்பின், இந்த வேண்டுகோளை நீங்கள் பரிசீலிப்பீர்கள் என நம்புகிறேன். அரசியல் கட்சிகள் அரசியல் ஆதாயத்தை மட்டும் நினைக்காமல், நாட்டின் எதிர்காலம் பற்றி சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

அதன்பின் அனைத்து எம்.பி.க்களும் பிரதமர் மோடி தலைமையில் புதிய நாடாளுமன்ற கட்டிடத்துக்கு நடந்து சென்றனர்.

**96 வயது:** நாடாளுமன்றத்தின் பழைய கட்டிடம் ஆங்கிலேய கட்டிடக் கலை நிபுணர்கள் சர் எட்விட் லத் யென்ஸ் மற்றும் ஹெர்பர்ட் பேக்கர் என்பவர்களால் வடிவமைக்கப்பட்டது. 1927-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட பழைய நாடாளுமன்றம் 96 ஆண்டுகள் பழமையானது. தற்போதைய தேவைகளுக்கு, இது போதுமானதாக இல்லாததால், கூடுதல் வசதிகளுடன் புதிய நாடாளுமன்றம் கட்டப்பட்டது.

EVA STALIN IAS